முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

117—

சாலையை மேம்படுத்துதல்

***2453—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, நொச்சிப்பாளையம் முதல் மீனாம்பாறை வரையுள்ள சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கரைப்புதூர் ஊராட்சியில் நொச்சிப்பாளையம் முதல் மீனாம்பாறை வரையுள்ள ஊராட்சி தார்ச் சாலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2016-2017 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு ஊராட்சி சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற குறிக்கோள்களுடன் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர ஏராளமான திட்டங்களைத் தந்து, நல்லாட்சி நடத்தி வருபவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள். கிராமப்புற மக்கள் நடைப் பயிற்சி மேற்கொள்ளவும், அவர்களின் பொழுதுபோக்கிற்கும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 500 'அம்மா பூங்காக்கள்' தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புற இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த 'அம்மா உடற்பயிற்சிக் கூடம்' தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளையெல்லாம் மேம்பாடு செய்ய, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நபர் விவசாய நிலங்களில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, விவசாய நிலங்களின் பரப்பினை அதிகரிக்க தனி நபர் கிணறுகள் மற்றும் குழுக் கிணறுகள் அமைக்கும் திட்டம் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமங்களைத் தூய்மைப்படுத்த தூய்மைக் காவலர் திட்டம் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீடித்த, நிலைத்த நீராதாரங்களை உருவாக்க தாய் திட்டத்தின்மூலம் 1,200 சிறு பாசன ஏரிகளைப் புனரமைத்து, மேம்பாடு செய்ய 300 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்து, வருங்கால சந்ததியினரும் நலமுடன் வாழ விதி 110-ன்கீழ் தினமும் திட்டங்கள் தந்து, நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பல்லடம் தொகுதிக்குட்பட்ட பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, நொச்சிப்பாளையம் முதல் மீனாம்பாறை வரை செல்லும் சாலையானது அவரப்பாளையம்-வீரபாண்டி செல்லும் சாலையையும் திருப்பூர்-உகாயனூர் செல்லும் சாலையையும் இணைக்கும் சாலையாகும். இது திருப்பூர் மாநகராட்சியை ஒட்டியுள்ள பகுதி. இங்கு சாயப்பட்டறைகளும்,

பனியன் தொழிற்சாலைகளும் நிறைந்துள்ளதால் போக்குவரத்தும் அதிகமாக உள்ளது. வீரபாண்டி கிராமத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிக்கு இந்தச் சாலை வழியாகத்தான் மாணவ மாணவிகள் செல்ல வேண்டும். ஆக, இந்த நிலையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று இந்தச் சாலை 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாடு செய்து தரப்படும் என்று அறிவித்ததற்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2016-2017 ஆம் நிதியாண்டில் இந்தச் சாலையானது அமைத்துத் தரப்படுமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை குறித்த அற்புதமான அறிவிப்புகளை நேற்றையதினம் வெளியிட்டார்கள். அதில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 900 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்தவும், அதிக அளவில் சேதமடைந்த 1,400 கி.மீ. நீளமுள்ள தார்ச் சாலைகளைச் சீரமைக்கவும், 1,200 கி.மீ. நீளமுள்ள சிறு பழுதடைந்த தார்ச் சாலைகளைப் புதுப்பிக்கவும் 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்புகளை வெளியிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் விதி 110-ன்கீழ் அறிவிப்பின்படி தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலைப் பணிகளை மேற்கொள்ள 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். சாதாரணமாக ஒரு திட்டத்தை அறிவித்தால் நாம் சொல்வோம், சாதாரண வேகம்,

2016 ஆகஸ்ட் 30]

மித வேகம், அதிகமான வேகம் என்று. ஆனால் ஜெட் வேகத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேற்றையதினம் அறிவித்தார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்தவுடனே நேற்றைய தினமே, மாலையிலே அரசாணை வெளியிடப்பட்டு இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பல பேர் விதி 110-ஐப் பற்றி சொல்வார்கள். விதி 110-ன்கீழ் 5 வருடங்களாக ஊரக வளர்ச்சித் துறையிலே அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் முழுமையாக அரசாணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது. நேற்றையதினம் அறிவித்ததற்கு நேற்று மாலையிலேயே அரசாணை வெளியிட்டாகிவிட்டது. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதி மக்களின் கனிவான கோரிக்கையை ஏற்று, அந்த நொச்சிப்பாளையம் முதல் மீனாம்பாறை வரை செல்லுகின்ற சாலையை. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.*

திரு. அ. நடராஜன்: *ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இந்த ஆண்டே எடுத்துச் செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்*

TRUTH ALONE TRIUMPHS

அவர்களுக்கும் தங்கள் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமருகின்றேன், நன்றி.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதியில் உள்ளடங்கிய செஞ்சி பேரூராட்சியில் கடந்த 2015 ஆம் ஆண்டு பெய்த கடுமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகள், சிறு பாலங்கள், வடிகால்கள் இதுவரையிலும் சீர்செய்யப்படாமல் உள்ளன. அந்தச் சீரமைப்புப் பணிகள் உள்ளாட்சித் துறையின் மூலமாக மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த 5 ஆண்டு பொற்கால ஆட்சியில் சென்னை மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊரகப் பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளுக்கும் கிட்டத்தட்ட 64,458 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட ரூ.17,954 கோடி அளவிற்கு அதிகமான நிதி ஒதுக்கப்பட்டு, சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய கடந்த தி.மு.க. ஆட்சியிலே வெறும் ரூ.6,823 கோடி நிதியைத்தான் அதற்காக ஒதுக்கியிருந்தார்கள். செஞ்சி தொகுதியில், செஞ்சி பேரூராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் சாலை உள்ளிட்டவை சேதமடைந்திருந்தால் துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு

2016 ஆகஸ்ட் 30]

கண்டிப்பாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாறு காணாத வகையில் 81 அறிவிப்புகளைக் காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையினர் நலனுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறை திறன் மேம்பாட்டுக்கும் அறிவித்தமைக்கு ஒட்டுமொத்த காவல் துறை சார்பாகவும், மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் சென்னை மாநகரில் பெய்த கனமழை காரணமாக மைலாப்பூர் தொகுதிக்குட்பட்ட பி.எஸ். சிவசாமி சாலை, ஜஸ்டிஸ் சுந்தரம் சாலை, தேவநாதன் சாலை ஆகியவை சேதமடைந்தன. மேலும் மைலாப்பூர், இராயப்பேட்டை பகுதிகளில் உற்பத்தியாகும் கழிவுநீரைக் கொண்டு செல்லும் பிரதான கழிவுநீர்க் குழாய்கள் சேதமடைந்தன. இவற்றின் சீரமைப்புப் பணிகள் தற்போது முடிவடைந்துள்ளன. அதற்காக சம்பந்தப்பட்ட துறைக்கும், அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேதமான சாலைகள் முறையே, பி.எஸ். சிவசாமி சாலை, ஜஸ்டிஸ் சுந்தரம் சாலை, தேவநாதன் சாலை மற்றும் பேருந்துகள் செல்லும் சாலைகள் விரைவாகச் சீரமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதிகளில் குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிகள்

முடிவடைந்துள்ளன என்று கூறினார்கள். குடிநீர்க் குழாய் மட்டுமல்ல, பாதாளச் சாக்கடைக் குழாய்கள் பதிக்கப்பட்ட இடங்களுக்கெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பகுதிகளிலெல்லாம் உடனடியாகச் சாலைப் பணிகளை மேற்கொள்ள நிதியினை ஒதுக்கீடு செய்து அந்தச் சாலைகளெல்லாம் மேம்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புது உத்திகளைக் கையாண்டு, புது technique-லே P.M.C. எல்லாம் போட்டு, milling எல்லாம் செய்து, அவ்வளவு அற்புதமான சாலைகளையெல்லாம் அமைத்துள்ளார்கள். அந்தளவுக்கு கனமழை பெய்தபோதும்கூட, கோட்டூர்புரம் சாலைகளிலெல்லாம் 12 அடி அளவிற்குத் தண்ணீர் நின்றபோதும்கூட எந்தப் பாதிப்பும் ஏற்படாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாலைகளை அமைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலைகளைச் சீரமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அச்சாலைகள் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

குளிர்பதன வசதிக் கூடம்

***886—திரு. பெரியண்ணன் அரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கென குளிர்பதன வசதிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?